மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பல இடங்களில் பொதுக் களங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. லால்குடி பகுதியில் புறம்போக்கு நிலங்களே இல்லாத காரணத்தாலும், அங்கே நிலம் வைத்திருப்பவர்களே களங்களை அமைத்திருக்கின்ற காரணத்தாலும், தனித்தனியாக களங்கள் இருப்பதாலும் அங்கே பொதுக் களம் கட்டுவதற்கு யாரும் முன்வரவில்லை.

திரு. கு. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, இப்போது பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கின்ற ரூ. 3 ஆயிரம் போதவில்லை. ரூ. 3 ஆயிரம் செலவில் களம் அமைத்தால் விவசாயிகளுக்குப் போதுமானதாக இல்லாதிருப்பதால் ரூ. 10 ஆயிரம் செலவு செய்து அமைப்பதற்கான ஒரு முறை இருப்பதால் ரூ. 10 ஆயிரம் பஞ்சாயத்துக் களங்கள் அமைப்பதற்கு கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இந்த நடப்பு ஆண்டில் 22,066 களங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் 3-இல் இரண்டு பங்கு அரசாங்கமே ஏற்றுக்கொள்ள திட்டம் இருக்கிறது. இந்த ரூ. 10 ஆயிரம் திட்டம் இப்போது நடைமுறையில் இல்லை.

திரு. தி. பொன்னுமலை: தலைவரவர்களே, தனி நபர்கள் களம் அமைக்க முன்வந்தால் பாதித் தொகையை மானியமாகத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அப்படி யோசனை ஒன்றுமில்லை.

திரு. கு. பெரியசாமி: சில கிராமங்களில் களம் கட்டுவதற்குப் புறம்போக்கு நிலங்கள் கிடையாது. நிலச்சுவான்தார்களிடமிருந்து களத்திற்குத் தேவையான நிலத்தை ஆர்ஜிதம் செய்து கிராம மக்களுக்கு உபயோகப் படுத்திக் கொள்வதற்கான திட்டம் அரசிடம் ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: நிலத்தை ஆர்ஜிதம் செய்து களம் அமைக்க முன் வந்தால் மூன்றில் இரண்டு பங்கு அரசு தரத் தயாராக இருக்கிறது.

கடலாடி ஒன்றியத்திலுள்ள ஆசிரியர்களது ஊதியம்

*204 வின.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி, திருப்புல்லாணி, பரமக்குடி, மண்டபம் ஆகிய ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கு 1973 ஆகஸ்டு மாதத்தில் இரண்டு மாதச் சம்பளம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்பது உண்மையா ?

1974 சனவரி 28]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கடலாடி ஊராட்சி ஒன்றியம் சம்பந்தப்பட்டவரை மட்டும் ஆசிரியர்களுக்கு 1973 ஜூலை ஆகஸ்டு மாதங்களின் ஊதியம் நிதி பற்றுக்குறை காரணமாக, 22—9—1973-ல் வழங்கப்பட்டது. மற்ற மூன்று ஊராட்சி ஒன்றியங்களிலும், ஜூலை மாதத்திய ஊதியம் குறித்த தேதியில், அதாவது 1—8—1973-லும் வழங்கப்பட்டது.

Gratuity scheme for labourers

* 205 *Q*.—THIRUMATHI T. N. ANANDANAYAKI:
THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any scheme under consideration to provide for the payment of gratuity to the Industrial Labour; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) — (இ) : 1972-ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 39/1972) படி தொழிற்சாலைகள், சுரங்கங்கள், எண்ணெய் வயல்கள், மலைத் தோட்டங்கள், துறைமுகங்கள், இருப்புப் பாதை நிறுவனங்கள், கடைகள் மற்றும் இதர நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஒரு வருடத்திற்கு 15 நாட்கள் ஊதிய வீதம் கணக்கிடப்பட்டு பணிக்கொடை வழங்கப்படும். இந்தச் சட்டம் 16—9—1972 முதல் அமுலுக்கு வந்துள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்தச் சட்டம் ஓட்டலிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளுக்கும் கட்டிடத்தில் வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளுக்கும் இன்னும் சின்கோனா பிளான்டேஷன் தொழிலாளிகளுக்கும் அமுலில் இல்லையே, அவர்களையும் இச்சட்டத்தில் சேர்க்கக்கூடிய அளவில் அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினுடைய வரம்பை விஸ்தரிக்கின்ற தன்மையில் பீடித் தொழிலாளர்களுக்கும் கேட்டரிங் தொழிலாளர்களுக்கும் மோட்டார் தொழிலாளர்களுக்கும் விஸ்தரிக்கலாமா என்பதைப் பற்றி மத்திய அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தச் சட்டத்தின்படி ஒவ்வொரு வருஷ சர்வீசுக்கும் 15 நாள் கிராச்சுவிட்டி கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், இன்றைக்குப் பல முதலாளிகள், 15 நாட்கள் கொடுக்க வேண்டியதற்குப் பதிலாக 13 நாள் என்று கொடுக்கிறார்கள் ; ஆகவே, 13 நாள் அல்ல, 15 நாள் கொடுக்க வேண்டுமென்று அரசு அம்முதலாளிகளுக்கு சுற்றறிக்கை விடுமா என்று அறிய விரும்புகிறேன்.